இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 30.05.2026

# தோல்வியில் முடிந்த டெல்லிப் பயணம்!

விஜய் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டது முதல், 'விஜய் நாளை டெல்லி பயணம்' என்ற செய்தியை தினந்தோறும் தமிழ்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டு வந்தன. அவருக்காக டெல்லி காத்திருப்பதைப் போன்ற பிம்பத்தை உருவாக்க இவர்கள் திட்டமிட்டார்கள். விஜய்யைவிட அதிகமாகவே இவர்கள் கூவினார்கள்.

**இருபது நாட்கள் கழித்துத்தான் அவருக்கு டெல்லியில் இருந்து அழைப்பு வந்தது. பிரதமரைச் சந்திக்கிறார், உள்துறை அமைச்சரைச் சந்திக்கிறார். நிதி அமைச்சரைச் சந்திக்கிறார், சோனியாவைச் சந்திக்கிறார், ராகுலைச் சந்திக்கிறார் என்று இரண்டு நாட்களுக்காக பயணத்திட்டத்தை ஊடகங்கள் வெளியிட்டன. 'இது மரியாதை நிமித்தமான பயணம் மட்டுமல்ல; மரியாதையை உயர்த்தப் போகும் பயணம்' என்றெல்லாம் ஊடகங்கள் அதிகமாக அலப்பறைகள் செய்தன. இவை எதுவும் நடக்கவில்லை.**

பிரதமர் மோடியைச் சந்தித்துள்ளார் முதலமைச்சர் விஜய். அதுவும் பத்து நிமிடத்துக்குள் இந்தச் சந்திப்பு அமைந்துள்ளது. இருதரப்புக்குமான நலம் விசாரிப்புடன் இந்தச் சந்திப்பு முடிந்து விட்டது. இது முதல் தோல்வி.

உள்துறை அமைச்சர் அமித்ஷா டெல்லியில்தான் இருந்தார். விஜய்யை சந்திக்க நேரம் ஒதுக்கி இருந்தார். ஆனால் அது ரத்து செய்யப்பட்டது. ஆனால் அன்றைய தினம் கேரள முதலமைச்சரை அமித்ஷா சந்தித்துள்ளார். கோவா முதலமைச்சரை அமித்ஷா சந்தித்துள்ளார். நாகலாந்து ஆளுநரை அமித்ஷா சந்தித்துள்ளார். தமிழ்நாட்டு முதலமைச்சரை சந்திக்க மறுத்துள்ளார். அமித்ஷா - விஜய் சந்திப்பு கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்டது. 'வேறு அலுவல்களில் உள்துறை அமைச்சர் இருக்கிறார்' என்றும், 'குஜராத் செல்கிறார்' என்றும் சொல்லப்பட்டது. திட்டமிட்டு விஜய்யுடனான சந்திப்பை அமித்ஷா ரத்து செய்துள்ளார். இது இரண்டாவது தோல்வி ஆகும்.

செய்தியாளர்கள் சந்திப்பைத் திட்டமிட்டுப் புறக்கணித்திருக்கிறார் விஜய். அவர் டெல்லி தமிழ்நாடு இல்லத்துக்கு வரும் போதும், பிரதமரைச் சந்திக்கச் செல்லும் போதும், பிரதமரைச் சந்தித்துவிட்டு வரும்போதும், டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்குத் திரும்பும்போதும் ஊடகவியலாளர்கள் விஜய்யைப் பார்த்து குரல் எழுப்புகிறார்கள். 'பிரஸ் மீட் பண்ணுங்க சார்', 'எல்லா முதலமைச்சர்களும் பிரஸ் மீட் பண்ணுவாங்க சார்' என்று குரல் எழுப்புகிறார்கள். அதைக் காதில் வாங்காமல் அலட்சியப்படுத்தி இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.

**விஜய் பதில் அளிக்காததால் டெல்லி செய்தியாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளார்கள். டெல்லியில் பிரதமரைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களைச் சந்திக்காத முதலமைச்சராக விஜய் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். டெல்லிப் பயணத்தின்போது செய்தியாளர்களை முதலமைச்சர் சந்திப்பது மரபு. அந்த மரபை அவர் மீறி இருக்கிறார். அலட்சியப்படுத்தி இருக்கிறார். டெல்லி ஊடகங்களை அவமானப்படுத்தி இருக்கிறார்.**

**இருபது நாட்களில் சீர்கெட்ட சட்டம் ஒழுங்கைப் பற்றியும், தான் ஆட்சி அமைக்க நடத்திய இழிவான குதிரை பேரங்கள் குறித்தும் ஊடகங்களுக்குப் பதில் சொல்ல தன்னால் முடியாது என்பதால் ஊடகங்களை விஜய் சந்திக்கவில்லை.**

**கரூர் சம்பவத்தின்போது பத்திரிகையாளர்களைச் சந்திக்காமல் தவிர்த்த விஜய் இன்று முதல்வராக இருக்கும் நிலையிலும் பத்திரிகையாளர்களைக் கண்டு அஞ்சுவது ஏன்? கட்சி மேடைகளில் மட்டும் வீர வசனம் பேசும் விஜய் பிரதமர் சந்தித்தது குறித்து கருத்து சொல்லத் தயங்குவது ஏன்?**

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனைப் பார்த்து மனு கொடுத்துள்ளார் விஜய். நிர்மலா சீதாராமனைச் சந்தித்த முதலமைச்சர் விஜய், இல்லாத திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரிக்கை வைத்துள்ளார். மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை கடந்த 2025 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் தேதி ஒன்றிய அரசு நிராகரித்து விட்டது. ஒன்றிய அரசு நிராகரித்துள்ள மதுரை, கோவை மெட்ரோ திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு ஒன்றிய நிதியமைச்சரிடம் கோரிக்கை வைத்துள்ளார் விஜய். மதுரை, கோவை மெட்ரோ திட்டங்களைச் செயல்படுத்தித் தாருங்கள் என்றுதான் அவர் கோரிக்கை வைத்திருக்க வேண்டும்.

கூட்டணிக் கட்சித் தலைவர்களான சோனியாவையும் ராகுலையும் விஜய் சந்திப்பார் என்பது மிகப்பெரிய செய்தியாகப் பேசப்பட்டது. ஆனால் அவர் அவர்கள் இருவரையும் சந்திக்கவில்லை. 'சென்னைக்கு அவசரமாகத் திரும்ப வேண்டி இருந்ததால் இந்தச் சந்திப்பு நடக்கவில்லை' என்று அரசு வட்டாரங்கள் சொன்னது. 'சோனியாவும், ராகுலும் வேறு பணிகளில் இருக்கிறார்கள்' என்று காங்கிரஸ் தரப்பு சொல்கிறது. திட்டமிட்ட பயணத்தை நடத்த முடியாத அள்வுக்கு இவை முக்கியமான காரணங்கள் அல்ல.

கேரளாவில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் விழாவுக்கும் வருவதாகச் சொல்லிவிட்டு ராகுலுக்கு அல்வா கொடுத்தார் விஜய். இப்போது சோனியா வீட்டுக்கு வருவதாகச் சொல்லி விட்டு, வராமல் திரும்பி இருக்கிறார் விஜய். இதன்பிறகுமா காங்கிரஸுக்கு உள் விவகாரங்கள் புரியவில்லை?

'காங்கிரஸின் 5 உறுப்பினர் ஆதரவைப் பெற்றாச்சு, அதுக்கு ரெண்டு மந்திரி தந்தாச்சு' என்பதோடு முற்றுப்புள்ளி வைக்க நினைக்கிறார் விஜய். 'நம்பிக்கைத் துரோக' காங்கிரஸுக்கு அதற்குப் புரியும் வகையில் பதில் சொல்லி விட்டார் விஜய் என்று தான் சொல்லத் தோன்றுகிறது. விஜய்க்காகக் காத்திருந்து ராகுல் ஏமாந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. விஜய் திட்டமிட்டே காங்கிரஸ் தலைவர்களுடனான சந்திப்பைத் தவிர்த்துள்ளார். இதன்மூலம் அவர் நம்பிக்கைக்கு உரியவர் அல்ல என்பதும் தெரிய வந்துள்ளது.

**மக்கள் செல்வாக்கை முழுமையாகப் பெற்ற முதலமைச்சர் அல்ல; குதிரை பேரத்தின் மூலமாகத்தான் முதலமைச்சர் ஆனவர் என்பது பிரதமருக்கும், உள்துறை அமைச்சருக்கும் தெரியும். அதனால்தான் விஜய்யை அவர்கள் மதிக்கவில்லை. இப்படி அவரது முதல் டெல்லி பயணமே தோல்வியாகவும் அவருக்கு மிகப்பெரிய சறுக்கலாகவும் அமைந்துள்ளது.**



புனித பக்ரீத் திருநாளை முன்னிட்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர்.அ.சுபேர்கான் குடும்பத்துடன் அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## காவல் துறையை ஆக்கப்பூர்வமாக செயல்பட வைக்க வேண்டும்!



# சோஃபா மாடல் ஆட்சியில் போலீசாருக்கும் பாதுகாப்பில்லை; போலீசாலும் பாதுகாப்பில்லை!

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

*சென்னை, மே 30-*

*தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீரழிந்து விட்டது எனவும், காவல் துறையை ஆக்கப்பூர்வமாக செயல்பட வைக்க வேண்டும் என்றும், சோஃபா மாடல் ஆட்சியில் போலீசாருக்கு பாதுகாப்பில்லை, போலீசாலும் பாதுகாப்பில்லை என சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்திருப்பதாவது:*

**சென்னை கோடம்பாக்கத்தில் Police உட்பட 3 பேர் சேர்ந்து, ஒரு சிறுவனை கட்டாயப்படுத்தி மது அருந்த வச்சு, Sexual Harassment–க்கும் ஆளாக்குன சம்பவம் அதிர்ச்சியை தருது.**

**Police–ட்ட இருந்து காப்பாத்திக்க, அந்த சிறுவன் Police Station–க்கு ஓட வேண்டிய நிலையில தான் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு சீரழிஞ்சு போய் இருக்கு.**

**இதுமட்டுமல்ல, வேளச்சேரியில் Walking போக வெளிய வந்த 61 வயது பெண்மணியை, ஒரு கும்பல் Sexual Harassment–க்கு ஆளாக்கின கொடுமையும் நடந்துருக்கு.**

**கும்பகோணத்துல ஆளுங்கட்சியினர் தாக்கினதுல ஒரு போலீஸ்காரருக்கே கை உடைஞ்சு போனதாவும் செய்தி.**

**இந்த # Sofa Model ஆட்சியில, போலீசாலயும் பாதுகாப்பு இல்ல. போலீசுக்குமே பாதுகாப்பு இல்ல.**

**ஆட்சியை காப்பாத்திக்க MLA–க்கள் பிடிக்கிற வேலையை விட்டுட்டு, தன்னோட கட்டுப்பாட்டுல இருக்கிற Police Department–ஐ ஆக்கப்பூர்வமா செயல்பட வைக்க முதலமைச்சர் முயற்சி செய்யணும்.**

*இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.*

## தமிழ்நாட்டில் ஜூன் 1ஆம் தேதி முதல் 60 சுங்கச் சாவடிகளில்

# புதிய கட்டண உயர்வு - தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் தகவல்!

## அத்தியாவசியப் பொருட்கள் விலை பலமடங்கு உயரும் அபாயம்!

**சென்னை, மே 30-**

**தமிழ்நாட்டில் ஜூன் 1ஆம் தேதி முதல் 60 சுங்கச்சாவடிகளில் திருத்தப்பட்ட புதிய கட்டணங்கள் அமலாகும் என தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளும் ஒன்றிய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் தேசிய நெடுஞ்சாலை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இந்த அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நாட்டின் முக்கிய சாலைகளின் கட்டுமானம், பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது.**

மேலும், சாலைகளில் பயணம் செய்யும் வாகனங்களிடமிருந்து சுங்கச்சாவடிகள் மூலம் கட்டணம் வசூலிக்க அனுமதி வழங்கப்படுகிறது. பல தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள் பொதுத்துறை மற்றும் தனியார் கூட்டுத்திட்ட முறையில் செயல்படுத்தப்படுவதால், சுங்கச்சாவடிகள் தனியார் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைக்கப்படுகின்றன. அந்த ஒப்பந்தத்தின்படி, குறிப்பிட்ட காலத்திற்கு வாகனங்களிடமிருந்து சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை வழங்கப்படுகிறது.

### 15 சதவிகிதம் வரை கட்டணம் உயர்வு!

நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்ற சுங்கச்சாவடிகளில் தமிழ்நாட்டில் மட்டும் 77 சுங்கச்சாவடிகள் உள்ளன. சுங்கக் கட்டணங்கள் ஒவ்வொரு ஆண்டும் மறுபரிசீலனை செய்யப்பட்டு உயர்த்தப்படுவது வழக்கமாக உள்ளது. பொதுவாக 5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை கட்டண உயர்வு அமல்படுத்தப்படுகிறது. சில இடங்களில் போக்குவரத்து அளவு, சாலை பராமரிப்பு செலவு, பணவீக்கம் உள்ளிட்ட காரணிகளை கருத்தில் கொண்டு 15 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தப்படும்.

### ஆண்டுக்கு ஆண்டு உயரும் கட்டணம்!

மேலும், தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டண உயர்வு காலமும் மாறுபடுகிறது. 1992ம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் ஏப்ரல் மாதத்தில் கட்டணம் உயர்த்தப்படுகிறது. அதேபோல் 2008ம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் செப்டம்பர் மாதத்தில் கட்டண உயர்வு நடைமுறைக்கு வருகிறது.

அதன்படி, கடந்த ஏப்ரல் 1ம் தேதி முதல் தமிழகத்தில் 60 சுங்கச்சாவடிகளில் சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட்டது. ஆனால் ஆண்டுதோறும் ஏப்ரல் மாத தொடக்கத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சுங்கக்கட்டண உயர்வு, இந்த ஆண்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது தேர்தல் நடைமுறைகள் முழுமையாக நிறைவடைந்ததை தொடர்ந்து, ஜூன் 1ம் தேதி முதல் புதிய திருத்தப்பட்ட சுங்கக்கட்டண உயர்வு அதிகாரப்பூர்வமாக அமலுக்கு வருகிறது.

இந்த புதிய கட்டண விகிதங்கள் அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதி வரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி வரும் ஜூன் 1ம் தேதி தமிழகத்தில் உள்ள மொரட்டாண்டி, பள்ளிக்கொண்டா, பெடகல்லுப்பள்ளி (வாணியம்பாடி), கானியூர், கிருஷ்ணகிரி, பரனூர், ஆத்தூர் (திண்டிவனம்), மாதூர், நல்லூர், சூரப்பட்டு, வானகரம், ஸ்ரீபெரும்புதூர் (பென்னலூர்), சென்னசமுத்திரம், எஸ்.வி.புரம், பட்டறைப் பெரும்புதூர், கல்லக்குடி, மணகத்தி, குருங்குடி (வீராணநல்லூர்), நாங்கிலிகொண்டான், காரியமங்கலம், நாகம்பட்டி,

கோத்தட்டை, கரகத்தஹள்ளி, கங்காரம்பாளையம், செலியமேடு, கீழ்குப்பம், பொன்னாலகரம், வள்ளம், ஏனம்காரியந்தல், தென்னமாதேவி, கதவாணி, வேலம்பட்டி, மதுக்கரை, எச். புதுப்பட்டி, பொங்கலூர், வலவந்தாங்கோட்டை, கப்பலூர், எட்டூர்வட்டம், சாலைப்புதூர், நாங்குநேரி, பூதகுடி (விராலிமலை), சிட்டம்பட்டி (மேலூர்), லெச்சுமணப்பட்டி, லெம்பலகுடி, கோடிக்கோட்டை, வெண்ணாத்தூர், பழைய கந்தர்வக்கோட்டை,

### சுங்கச் சாவடியின் கட்டணங்கள் மாற்றியமைப்பு!

செண்பகம்பேட்டை, திருப்பாச்சேதி வடக்கு, போகலூர், வாகைக்குளம், திருப்பதிசாரம், உப்பார்பட்டி, சத்திரப்பட்டி, புதூர், கோவில்வேணி, வெம்புக்குடி, மணம்பாடி, புதூர்பாண்டியபுரம், எலியார்பதி, வலவந்தாங்கோட்டை ஆகிய 60 சுங்கச்சாவடிகளில் திருத்தப்பட்ட கட்டண உயர்வு அமலுக்கு வரும் என தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் ஒப்பந்த விதிமுறைகளின்படி, சுங்கச் சாவடிகளின் கட்டணங்கள் ஒவ்வோர் ஆண்டும் பணவீக்கம் மற்றும் மொத்த விலை குறியீட்டெண் அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும். அதன்படி, கடந்த பிப்ரவரி மாத இறுதியில், ஒன்றிய அரசின் தற்காலிக மொத்த விலை குறியீட்டெண் தரவுகளின் அடிப்படையில், நாடு முழுவதும் ஏப்ரல் 1 முதல் கட்டணத்தை உயர்த்துவதற்கான முதற்கட்ட ஆயத்தப் பணிகள் மற்றும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

வழக்கமான நடைமுறைப்படி, மார்ச் மாத இறுதியில் அரசு வெளியிடும் இறுதி திருத்தப்பட்ட மொத்த விலை குறியீட்டெண் கணக்கில் கொள்ளப்பட்டு, துல்லியமான கட்டண உயர்வு ஏப்ரல் 1ம் தேதி முதல் அமல்படுத்தப்படும். இந்த ஆண்டு தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலங்களில் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டதால், தமிழ்நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தன. இதனால், இறுதி செய்யப்பட்ட புதிய சுங்கக்கட்டண விகிதங்களை அரசால் ஏப்ரல் மாதத்தில் நடைமுறைப்படுத்த முடியாமல் போனது.

தேர்தல் வாக்குப்பதிவு முடிந்து தேர்தல் நடத்தை விதிமுறைகளை தளர்வுசெய்யப்பட்டத்தை தொடர்ந்து, திருத்தப்பட்ட சுங்கக் கட்டணம் ஜூன் 1ம் தேதி முதல் அமலுக்கு வரும். அதன்படி தமிழ்நாட்டில் உள்ள 60 சுங்கச்சாவடிகளிலும் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு கொண்டு வரப்படுகிறது. இவ்வாறு தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் கூறினார்.

### பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்!

இதுதொடர்பாக லாரி உரிமையாளர்கள் சங்கங்கள் கூறுகையில், "லாரி, பேருந்து மற்றும் பல அச்சு கொண்ட பெரிய சரக்கு வாகனங்களுக்கான சுங்கக்கட்டண உயர்வு மற்றும் மாதாந்திர பாஸ் விலை அதிகரிப்பு ஆகியவை பொதுமக்களிடையே மறைமுகப் பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். ஏற்கனவே நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பெட்ரோல், டீசல் விலை உயர்வால் துவண்டு போய் உள்ள நிலையில் இது கூடுதல் சுமையை ஏற்படுத்தியுள்ளது. சரக்குக் கட்டணங்கள் மற்றும் லாரி வாடகைகள் உயரம் வாய்ப்புள்ளதால், காய்கறிகள், பழங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் விலை உயர வாய்ப்புள்ளது" என்றனர்.

சென்னை (அக்கரை) மாமல்லபுரம் புதிய சுங்கக்கட்டண விவரங்கள் (ஜூன் 1 முதல்)

1. கார், ஜீப், 3 சக்கர வாகனங்கள்

ஒருமுறை பயணம் ரூ.50, இருவழிப் பயணம் ரூ.75, ஒரு நாள் பாஸ் ரூ.140, 50 முறை பயணம் ரூ.1,685, மாதாந்திர பாஸ் ரூ.2,960

2. இலகுரக வணிக வாகனங்கள் (சரக்கு வாகனம் / மினி பஸ்)

ஒருமுறை பயணம் ரூ.80. இருவழிப் பயணம் ரூ.125, ஒரு நாள் பாஸ் ரூ.225, 50 முறை பயணம் ரூ.2,725, மாதாந்திர பாஸ் ரூ.4,780

3. பேருந்து / லாரி (2 அச்சு)

ஒருமுறை பயணம் ரூ.170, இருவழிப் பயணம் ரூ.255, ஒரு நாள் பாஸ் ரூ.470, 50 முறை பயணம் ரூ.5,710, மாதாந்திர பாஸ் ரூ.10,020

4. 3 அச்சு வணிக வாகனங்கள்

ஒருமுறை பயணம் ரூ.185, இருவழிப் பயணம் ரூ.280, ஒரு நாள் பாஸ் ரூ.515, 50 முறை பயணம் ரூ.6,230, மாதாந்திர பாஸ் ரூ.10,030

5. பல அச்சு வாகனங்கள் (4 முதல் 6 அச்சு)

ஒருமுறை பயணம் ரூ.270, இருவழிப் பயணம் ரூ.405, ஒரு நாள் பாஸ் ரூ.740, 50 முறை பயணம் ரூ.8,950, மாதாந்திர பாஸ் ரூ.15,710

6. மிகப் பெரிய வாகனங்கள் கட்டுமான வாகனம் (7 அல்லது அதற்கு மேல் அச்சு)

ஒருமுறை பயணம் ரூ.325, இருவழிப் பயணம் ரூ.490, ஒரு நாள் பாஸ் ரூ.900, 50 முறை பயணம் ரூ.10,900, மாதாந்திர பாஸ் ரூ.19,125

உள்ளூர் வணிக வாகனங்களுக்கான மாதாந்திர பாஸ் கட்டணம்

லோடு ஆட்டோ, டாக்சி, கார், ஜீப் ரூ.255, இலகுரக வணிக வாகனங்கள், ஜேசிபி, கிரேன் ரூ.330, லாரிகள், பேருந்துகள் ரூ.1,010, பள்ளி பேருந்துகள் ரூ.2,020

### மாதாந்திர பாஸ் உள்ளவர்களுக்கு பெரும் பாதிப்பு!

* ஒருமுறை பயணம், மாதாந்திர பாஸ் பயன்படுத்துவோருக்கு பெரும் பாதிப்பு

தினசரி பயணிக்கும் பொதுமக்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்குப் பெரும் நிவாரணமாக, கார்கள், ஜீப்கள் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட 3 சக்கர வாகனங்களுக்கான ஒருமுறை பயணம் மற்றும் இருவழிப் பயணக் கட்டணங்களில் எந்தவித சுங்கக்கட்டண உயர்வும் செய்யப்படவில்லை. பல அச்சு கொண்ட பெரிய வணிக வாகனங்கள் மற்றும் கனரக சரக்கு லாரிகளுக்கு ஒருமுறை பயணிப்போர் மற்றும் மாதாந்திர பாஸ் பயன்படுத்துவோருக்கு ரூ.5 வரை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் வாகனங்களின் வகையைப் பொறுத்து ரூ.5 முதல் ரூ.10 வரை அதிகரிக்கக்கூடும்.